**செய்தி வெளியீடு எண்: 685** **நாள்: 18.11.2012**

<u>செய்தி வெளியீடு</u>

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்;
எட்டு மறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி

என்ற பாரதியின் கூற்றுப்படி, இன்று பெண்கள் கல்விக்கு ஊக்கமளிக்கப்பட்டு, அவர்கள் பணிபுரியாத துறைகளே இல்லை என்று சொல்லும் அளவுக்கு அனைத்துத் துறைகளிலும் பெண்கள், ஆண்களுக்கு சரிநிகர் சமமாக பணியாற்றி வருகிறார்கள்.

மகளிர் சொந்தமாக தொழில் செய்து, பொருளாதாரத்தில் முன்னேற்றம் பெறவேண்டும் என்ற உயரிய நோக்கத்தின் அடிப்படையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் மகளிர் சுயஉதவிக் குழு இயக்கம் 1991-92ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இன்று தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் இந்த திட்டம் பரந்து விரிந்துள்ளது. தற்பொழுது இந்தத் திட்டத்தின் கீழ் 85.70 லட்சம் மகளிரைக் கொண்ட 5.56 லட்சம் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் தமிழகத்தில் உள்ள மகளிர் வாழ்வில் பெரும் மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது.

தற்பொழுது மகளிர் சுய உதவிக் குழுக்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கங்கள் மூலம் சந்தைப்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், இந்த பொருட்களின் விற்பனையை அதிகரிக்கும் பொருட்டும், இப்பொருட்களை மாநில, தேசிய மற்றும் சர்வதேச அளவில் சந்தைப்படுத்துவதற்காகவும் மாநில வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கம் ஒன்றினை மாநில அளவில் உருவாக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதற்காக 15 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

மேலும், மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கங்களின் பணிகள் மக்களை சென்று அடைவதை உறுதி செய்யும் வண்ணம், இவற்றின் பணிகளை மேன்மைப்படுத்த இந்த நிதியாண்டில் ஒரு மாவட்டத்திற்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வீதம் 31 மாவட்டங்களில் உள்ள மாவட்ட அளவிலான வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கங்களுக்கு 77 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். மேலும், தற்பொழுது செயல்பாட்டிலுள்ள மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கங்களின் பணிகள், புதியதாக துவங்கப்பட உள்ள மாநில வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கத்துடன் ஒருங்கிணைக்கப்படும்.

மாநில வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கத்துடன், மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கங்களின் பணிகள் ஒருங்கிணைக்கப்படுவதன் மூலம், மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் சர்வதேச அளவில் சந்தைப்படுத்தப்பட்டு, அவற்றின் விற்பனை அதிகரிப்பதுடன், அவர்களின் வாழ்க்கைத்தரம் உயரவும் வழிவகுக்கும்.

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9.

நாள் :- 18.11.2012.